## விருதுநகர் மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை

**(மே 2-ம் தேதி முதல் மே 6-ம் தேதி வரை)**

**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (28.4.15- 30.4.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 6.6 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 35 - 37 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 25 - 26 |
| வானம் (ஆக்டா) | 2 - 6 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 60 - 72 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 30 - 50 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 0 - 8 |
| காற்றின் திசை | 0 - 160 |

**6.5.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>2.5.15 | நாள் 2<br>3.5.15 | நாள் 3<br>4.5.15 | நாள் 4<br>5.5.15 | நாள் 5<br>6.5.15 |
| மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 2 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 37 | 37 | 38 | 38 | 39 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 26 | 26 | 27 | 27 | 28 |
| வானம் (ஆக்டா) | 3 | 3 | 3 | 3 | 5 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 50 - 65 | 50 - 65 | 45 - 60 | 45 - 60 | 42 - 58 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 6/ மேற்கு | 6/ மேற்கு | 6/ மேற்கு | 6/ தென்கிழக்கு | 6/ மேற்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் இலேசான மேகமூட்டம், மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர் / சாகுபடி சூழல் | பருவம் /சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| கரும்பு | வளர்ச்சி பருவம் | வளர்ச்சி பருவத்திலுள்ள கரும்பில் நீர்ப்பற்றாக்குறையை சமாளிக்க யூரியா 2.5% மற்றும் பொட்டாஷ் 2.5% கரைசலை 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும். மேலும் கயோலின் 6 சத கரைசலை தெளித்து நீராவிப்போக்கின்மூலம் நீர் இழக்கப்படுவதை குறைக்கவும். பாசன நீர் |

| | | |
|---|---|---|
| | | பற்றாக்குறையை சமாளிக்க ஒன்றுவிட்டு ஒன்று சால் பாசனம் மற்றும் விடுசால் பாசனம் போன்ற முறைகளை பின்பற்றவும். |
| கத்தரி | பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் | கத்தரியில் பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் முக்கியமான பருவமாதலால் ஊட்டச்சத்துக்களை சொட்டு நீர்ப்பாசனம் மூலம் 3 நாட்களுக்கு ஒரு முறை அளிக்கவும். ஒவ்வொரு உரப்பாசனத்திற்கும் 12- 61 - 0 உரம் 0.69 கிலோ/ எக்டர், 13- 0-45 உரம் 2.47 கிலோ/ எக்டர் மற்றும் யூரியா 3.96 கிலோ/ எக்டர் என்ற அளவில் பயன்படுத்தவும். நட்ட 71- 150-ம் நாள் வரை இதே அளவு ஊட்டச்சத்து பரிந்துரையை பின்பற்றலாம். |
| தக்காளி | பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் | தக்காளியில் பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் முக்கியமான பருவமாதலால் ஊட்டச்சத்துக்களை சொட்டு நீர்ப்பாசனம் மூலம் 3 நாட்களுக்கு ஒரு முறை அளிக்கவும். ஒவ்வொரு உரப்பாசனத்திற்கும் 12- 61 - 0 உரம் 1.14 கிலோ/ எக்டர், 13- 0-45 உரம் 6.17 கிலோ/ எக்டர் மற்றும் யூரியா 2.8 கிலோ/ எக்டர் என்ற அளவில் பயன்படுத்தவும். நட்ட 71- 150-ம் நாள் வரை இதே அளவு ஊட்டச்சத்து பரிந்துரையை பின்பற்றலாம். |
| வெண்டை | பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் | வெண்டையில் பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் முக்கியமான பருவமாதலால் ஊட்டச்சத்துக்களை சொட்டுநீர்ப்பாசனம் மூலம் அளிக்கவும். 12- 61 - 0 உரம் 8.2 கிலோ/ எக்டர், 13- 0-45 உரம் 44.4 கிலோ/ எக்டர் மற்றும் யூரியா72.3 கிலோ/ எக்டர் என்ற அளவில் பயன்படுத்தவும். |

குறுஞ்செய்தி- மழை- மே 6-ம் தேதி 2 மி.மீ. தக்காளி- சொட்டு உரநீர்ப்பாசனம்(எக்டருக்கு) 12-61-0 உரம் 1.14 கிலோ, 13-0-45 உரம் 6.17 கிலோ& யூரியா2.8 கிலோ3 நாட்களுக்கு ஒரு முறை அளிக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி